வேலூர் மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலரின் செயல்முறைகள்
ந.க.எண்.3057/அ4/2024 நாள். 26.07.2024

---

பொருள் : பள்ளிக் கல்வி – மேல்நிலைக்கல்வி – வேலூர் மாவட்டம், அரசு / நகரவை/ மேல்நிலைப் பள்ளிகளில் பணிபுரியும் உடற்கல்வி இயக்குநர் நிலை –1 – மாவட்ட உடற்கல்வி ஆய்வாளர் – பணிமாறுதல் முன்னுரிமைப்பட்டியல் கோருதல் – சார்பு

பார்வை : 1.அரசாணை நிலை எண்.14 பள்ளிக்கல்வித்துறை நாள்.30.01.2020
2.சென்னை–6, தமிழ்நாடு பள்ளிக் கல்வி இணை இயக்குநரின் (மேல்நிலைக்கல்வி) செயல்முறைகள் ந.க.எண்.040509/டபிள்யு3 /இ2/2024 நாள்.22.07.2024.

-----

பார்வை 2இல் காணும் பள்ளிக் கல்வி இணை இயக்குநரின் (மேல்நிலைக்கல்வி) செயல்முறைகளின்படி வேலூர் மாவட்டத்திலுள்ள அரசு/ நகரவை/ மேல்நிலைப் பள்ளிகளில் 01.01.2024 நாளிட்ட உடற்கல்வி இயக்குநர் நிலை – 1 பதவியிலிருந்து மாவட்ட உடற்கல்வி ஆய்வாளர் பணிமாறுதல் வழங்கிட உடற்கல்வி இயக்குநர் நிலை – 1 உத்தேச முன்னுரிமைப்பட்டியல் இத்துடன் இணைத்து அனுப்பப்படுகிறது. உத்தேச முன்னுரிமைப்பட்டியலில் குறிப்பிடப்பட்டவர்களை விட பணியில் முத்தவர் இருப்பின் தங்களின் சான்றிதழ் நகல் மற்றும் இணைப்பில் உள்ள படிவத்தில் விவரங்களை பூர்த்தி செய்து இரண்டு நகல்களில் வேலூர் மாவட்ட முதன்மைக்கல்வி அலுவலக அ4 பிரிவில் 30.07.2024 அன்று காலை 10.00 மணிக்குள் நேரடியாக தனிநபர் மூலம் ஒப்படைக்குமாறு சார்ந்த மேல்நிலைப் பள்ளி தலைமையாசிரியர்களுக்கு தெரிவிக்கப்படுகிறது.

இவ்விதிகளின் கீழ் விதி 7(a) இன் இணைப்பில் மாவட்ட உடற்கல்வி ஆய்வாளர் பணியிடத்துக்கான கல்வித்தகுதிகளுடன் கீழ்க்காண் 4 துறைத் தேர்வுகள் உரிய காலத்திற்குள் கட்டாயம் தேர்ச்சி பெற வேண்டுமென குறிப்பிடப்பட்டுள்ளது.

1. The account test for subordinate officers
2. The Tamilnadu govt.office manual test
3. Tamilnadu school education department administrative paper I
4. Tamilnadu School education department administrative paper II

இணைப்பு: 6 நபர்களுக்கான உத்தேச
முன்னுரிமைப்பட்டியல்

//ஒப்பம்//
முதன்மைக் கல்வி அலுவலர்,
வேலூர்.

பெறுநர்,
தலைமையாசிரியர்,
அரசு/ நகரவை/ மேல்நிலைப் பள்ளி.
வேலூர் மாவட்டம்.